ஹாக்ஸ்பரி-நேபியன் (HAWKESBURY-NEPEAN)
மெய்த்தகவல் அறிக்கை

# எப்படி வெளியேறுவது என்பதை அறிந்துகொள்ளவும்

ஹாக்ஸ்பரி-நேபியன் பள்ளத்தாக்கில் (HAWKESBURY-NEPEAN VALLEY) வெள்ளப்பெருக்கு வெளியேற்றப் பாதைகள்

**ஹாக்ஸ்பரி-நேபியன் பள்ளத்தாக்கில் வெள்ளப்பெருக்குகள் எச்சரிக்கை எதுவுமின்றி நிகழலாம். வெளியேறுவதற்கான அவசர எச்சரிக்கையைத் தொடர்ந்து நீங்கள் வெளியேற உங்களுக்கு சில மணிநேரங்கள் மட்டுமே இருக்கலாம். நீங்கள் தயாராக இருக்க வேண்டும், மேலும் உங்கள் வெளியேற்றப் பாதைகளை அறிந்து கொள்ள வேண்டும்.**

## எப்போது, எப்படி வெளியேறுவது என்பதை அறிந்துகொள்ளல்

ஹாக்ஸ்பரி-நேபியன் பள்ளத்தாக்கு சேதம் விளைவிக்கும் மற்றும் ஆபத்தான வெள்ளப்பெருக்குகள் கொண்ட ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், செல்லப்பிராணிகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க, வெளியேறுவதற்கான எந்த திசைகள் உள்ளிட்ட அனைத்து ஆலோசனைகளயும், அவசர எச்சரிக்கைகளையும் நீங்கள் பின்பற்ற வேண்டும். உங்கள் சுற்றுப்புறத்தில் வெள்ளநீரின் எந்தவித அறிகுறியையும் நீங்கள் காண்பதற்கு முன்பே, நீங்கள் வெளியேறும்படி கேட்டுக் கொள்ளப்படலாம். நீங்கள் வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சமயத்தில் இருந்து, உங்கள் வீட்டில் தங்குவதும், உள்ளிருப்பதும் பாதுகாப்பானது அல்ல.

வெளியேற்ற உத்தரவுகள் மற்றும் எந்தப் பாதைகள் திறந்திருக்கும் என்பதைப் பற்றி அறிந்துகொள்ள, உங்கள் உள்ளூர் மற்றும் ABC வானொலியைக் கேட்கவும், NSW SES இணையதளத்தைப் பார்வையிடவும், அல்லது NSW SES Facebook அல்லது NSW Police Facebook மற்றும் Twitter -ஐப் பின்தொடரவும்.

## பாதைகளை நன்கு பழக்கப்படுத்திக் கொள்ளவும்

வாலாசியா (Wallacia), பென்ரித்-ஈமு சமவெளி (Penrith-Emu Plains), ரிச்மண்ட்-வின்ட்சர் (Richmond-Windsor), தெற்கு மற்றும் கிழக்கு சிற்றோடை வெள்ளச் சமவெளிகள் (South and Eastern Creek floodplains) ஆகியவற்றிலிருந்து வெளியேற, விரைவான மற்றும் பாதுகாப்பான வழியை வழங்கும் 12 நியமிக்கப்பட்ட வெளியேற்றப் பாதைகள் உள்ளன. (மெய்த்தகவல் அறிக்கையின் (fact sheet) பின்புறத்தில் உள்ள வரைபடத்தைப் பார்க்கவும்).

நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பாதைகளை அறிந்திருக்க வேண்டும், ஏனென்றால் ஒவ்வொரு வெள்ளப்பெருக்கும் வித்தியாசமாக நடந்துகொள்ளும், அத்துடன் வெவ்வேறு இடங்களில் வெளியேற்றப் பாதைகள் வெள்ளநீரால் துண்டிக்கப்பட்டிருக்கும். சில பாதைகள் ஒப்பீட்டளவில் சிறிய வெள்ளத்தினால் மிக ஆரம்பத்திலேயே துண்டிக்கப்பட்டிருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, விண்ட்சரில் (Windsor) வெள்ள நீர் 13.5 மீட்டரை எட்டும் போது வின்ட்சர் சாலை (Windsor Road) துண்டிக்கப்படுகிறது, இது எந்தவொரு ஆண்டிலும் ஏறக்குறைய 20 இல் 1 என்ற அளவில் நடப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

அதிக அளவில் அமைக்கப்பட்ட வெளியேற்றப் பாதைகள் கூட பெரிய வெள்ளத்தால் பாதிக்கப்படலாம். வின்ட்சரில் 17.3 மீட்டர் உயரத்தில் அதன் சாலை மட்டத்தை நெருங்கும் போது, ஜிம் ஆண்டர்சன் பாலம் (Jim Anderson Bridge) துண்டிக்கப்படலாம். இது எந்தவொரு ஆண்டிலும் ஏறக்குறைய 100 இல் 1 என்ற அளவில் நடப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களுக்கான மிகச் சிறந்த பாதைகளை நீங்கள் அறிந்தவுடன், செல்ல வேண்டிய ஒரு இடத்தை ஒழுங்கமைக்க, நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் உரையாடவும். ஒவ்வொரு வெள்ளமும் வித்தியாசமாக இருக்கும் என்பதால்,வெளியேறுவதற்கான அவசர எச்சரிக்கை வழங்கப்படும்போது அவள்றைப் பின்பற்றுவது முக்கியம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்

## சைகைக் குறியீடுகளைப் (signs) பின்பற்றவும்

ஓட்டுநர்களுக்கு வழிகாட்ட, ஹாக்ஸ்பரி-நேப்பியன் பள்ளத்தாக்கு முழுவதும் 150 -க்கும் மேற்பட்ட புதிய வெள்ளப்பெருக்கு வெளியேற்றச் சைகைப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. ஓட்டுநர்களுக்குக் கூடுதல் வழிகாட்டலை வழங்குவதற்காக, வெள்ளப்பெருக்கின் அவசரகாலத்தின் போது திறக்கப்படுவதற்காக வடிவமைக்கப்பட்ட, பல மடிக்கப்பட்ட பலகைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான சைகைக் குறியீடுகள் உள்ளன.

### பிராந்திய வெள்ளப்பெருக்கு வெளியேற்றப் பாதைகளில், பாதுகாப்பான பகுதிகளை நோக்கி மக்களை வழிநடத்துவதற்கான சைகைக் குறியீடுகள்.



# வெள்ளப்பெருக்கு வெளியேற்றப் பாதைகள்

## ஹாக்ஸ்பரி-நேபியன் பள்ளத்தாக்கு




SES
NSW STATE EMERGENCY SERVICE

**www.ses.nsw.gov.au/flood-awareness-nsw/sydney-rivers/hawkesbury-nepean-valley/** என்ற இணையதளத்தில் மேலும் அறிந்து கொள்ளவும் அல்லது அருகிலுள்ள குறியீட்டை அலகீடு (scanning) செய்யவும்